THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Scheme need not be considered for the following reasons:

(i) The major outlet for the Calcium Carbide was the PVC producers. The cost of PVC has since gone down considerably and possibilities of PVC producers purchasing Calcium Carbide for manufacture became doubtful;

(ii) The present demand for the Calcium Carbide is about 48,000 tonnes, whereas the total quantity available for sale in 1975-76 will be about 93,000 tonnes excluding new capacities approved by the Government of India;

(iii) Production of Calcium Carbide requires 10 M.W. of power and so, it is difficult to get so much of power in our State which has been facing power deficit;

(iv) M/s. Industrial Chemicals, Limited have also expressed the view that in the above circumstances, it may not be advisable to proceed with the scheme at present.

கோவில்பட்டி-செட்டிக்குறிச்சி பேருந்து பணி

*59 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலிருந்து கட்டாலாங்குளம் செட்டிக்குறிச்சி வரை ஓடிக்கொண்டிருந்த டவுன் பஸ் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், நிறுத்தப்பட்டதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) குறிப்பிட்ட வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த கோவில்பட்டி திரு. கே. பாலசுப்பிரமணியம் மோட்டார் சர்வீஸின் தற்காலிக அனுமதிச் சீட்டு 30—9—1974 அன்று முடிவடைந்து விட்டது. 1—10—1974-க்கு பிறகு தற்காலிக அனுமதி சீட்டுக்கான விண்ணப்பம் எதும் வரவில்லை.

1975 அக்டோபர் 25]

திரு. எம். முத்தையா : கோவில்பட்டியிலிருந்து செட்டிகுறிச்சி வரை ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸுக்கு லைசென்ஸ் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கு பலர் விண்ணப்பம் போட்டிருந்தும் இதுவரை யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. தனியார் பஸ் விடவில்லை என்றாலும் அரசு பஸ்ஸாவது விட வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. தனியார் பஸ் அல்லது அரசு பஸ் அந்த ரூட்டில் விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்த வழித் தடத்தில் நிரந்தரமாக பஸ் விட ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அது குறித்து பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 1—10—1974-ல் இருந்து அங்கே பஸ் ஓடவில்லை. ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிவிட்டது. இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. கார்ப்பரேஷன் பஸ்ஸையாவது சிக்கிரம் விடக்கூடாதா? பிரைவேட் ஆப்பரேட்டர்களிடம் அப்ளிகேஷன் கேட்டு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் என்ன டிபேட்டிலா பேசுகிறீர்கள்? You must ask a question.

திருமதி த. ந. அனந்தநாயகி : டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிற கஷ்டத்தைச் சொல்லுகிறேன்.

The Corporation can run a bus. Why should the people be put to inconvenience?

MR. DEPUTY SPEAKER : The hon. Member should frame it as a question.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கனவே சொன்னபடி நிரந்தர பர்மிட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த வழித் தடத்தில் பஸ் ஓடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள், விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அங்கு பஸ்விட ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? அந்த வழித் தடத்தில் தனியார் பஸ்ஸோ அல்லது அரசாங்க பஸ்ஸோ விட உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எல்லா வண்டிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் தரப் பட்டிருக்கின்றன. பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

Nagercoil-Keezhkulam Pidakai bus service.

* 60. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state whether there is any proposed under consideration to resume the 9-C route bus service between Nagercoil and Keezhkulam Pidakai in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேருந்துகள் பற்றுக்குறை காரணமாக நாகர்கோயிலுக்கும் கீழ்குளம் பிடாகைக்கு மிடையிலான 9-சி வழித்தடத்தில் 1—4—1975-லிருந்து பேருந்து விடப்படுவதில்லை. தற்போது நெரிசல் நேரப் போக்குவரத்துப் பணிக்குரியதாக இவ்வழித்தடம் மாற்றப்பட்டு பேருந்துகள் முறையாக விடப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : இது ஒரு முக்கியமான பஸ் ரூட். அடிக்கடி இங்கு பஸ் சர்விஸ் நிறுத்தப்படுகிறது. அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக அங்கு பஸ் சர்விஸ் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது நிரந்தரமாக பஸ் போய் வந்து கொண்டிருக்கிறது. பொதுமக்கள் தேவையைச் சிந்தித்து 341 ஆம் எண் வழித்தடம் பேருந்துப் பணி போதுமானது என்று அரசு கருதுகிறது.